# சுவிஸ் தமிழ்க் கத்தோலிக்க ஆன்மிகப் பணியகம் நடாத்தும் மறை அறிவுப் போட்டிகள் - 2024

### பிரிவு 11 ( 2008 ஆம் ஆண்டில் பிறந்தவர்கள் வயது 16)

## விவிலிய வினாவிடைப் போட்டி

1. ஜெருசலேம் தேவாலயம் கட்டிய அரசனின் பெயர் என்ன? **சாலமோன்**
2. எருசலேம் தேவாலயத்தை கட்ட எத்தனை ஆண்டுகள் ஆனது? **46**
3. சாலமோன் கடவுளிடம் எதைக் கேட்டான்? தன் நாட்டையும், மக்களையும் ஆளுவதற்கு தேவையான **ஞானத்தை**
4. தாவீது அரசனின் வாழ்நாளில் அவருடைய நெருங்கிய நண்பன் யார்? **ஈராம்**
5. ஈராம் எந்த இனத்தவனன்? **நப்தலி இனம்**
6. கடவுள் தாவீதுக்கு பிறகு யார் அரசனாவான் என்று சொன்னார்? **சாலமோன்**
7. சாலமோன் மகன் பெயர் என்ன? **ரெகபெயாம்**
8. சாலமோன் அரசன் இஸ்ராயேலரை எத்தனை ஆண்டுகள் ஆட்சி செய்தான்? **40**
9. சாலமோனை சோதித்து பார்க்க வந்த அரசி எந்த நாட்டை சேர்ந்தவர்? **சோபா நாட்டவர்**
10. ஆகாபு அரசனின் மகன் பெயர் என்ன? **அகதியா**
11. ஆகாபுவின் மனைவி பெயர் என்ன? **ஈசபெல்**
12. ஈசபெல் யாரைக் கல்லால் எறிந்து கொல்லும்படி மடல் எழுதினாள்? **நாபோத்**
13. சாலமோனுக்கு எத்தனை மனைவிமார் இருந்தனர்? **700**
14. நெபாற்றின் மகன் பெயர் என்ன? **எலிசா**
15. எலியா பாகால் பொய் இறைவாக்கினரை எங்கே கொண்டு போய் கொலை செய்தான்? **கீசோன்**
16. எலியா வாழ்ந்த ஊரின் பெயர் என்ன? **திஸ்பே**
17. எலியாவுக்கு உணவளித்த பறவையின் பெயர் என்ன? **காகம்**
18. எலியா விண்ணகத்துக்கு எப்படி எடுத்துக்கொள்ளப்பட்டார்? **சுழல் காற்றின் மூலம்**
19. எலியா எலிசாவிடம் «நான் உனக்கு என்ன செய்ய வேண்டும்» என்று கேட்ட போது எலிசா என்ன கேட்டார்? **உமக்கு இருக்கும் ஆவியை இரண்டு மடங்காக தரும்படி கேட்டார்.**
20. எலியா விண்ணகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது எலிசாவின் கண்களை எது வந்து மறைத்தது? **நெருப்புத் தேரும், நெருப்புக் குதிரைகளும்**
21. எலியா விண்ணகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது மேலிருந்து என்ன விழுந்தது? **போர்வை**
22. யோவான் நற்செய்தியாளரின் அடையாளம் (சின்னம் ) என்ன? **கழுகு**
23. நற்செய்தியாளர் யோவான் யாருடைய மகன்? **செபுதேயுவின் மகன்**
24. இயேசுவின் அன்புச் சீடர் யார்? **யோவான்**
25. இயேசு எங்கே திருமுழுக்கு பெற்றார்? **யோர்தான் நதிக்கடையில்**
26. இயேசு யாரிடம் திருமுழுக்கு பெற்றார்? **திருமுழுக்கு யோவானிடம்**
27. இதோ கடவுளின் ஆட்டுக்குட்டி என்று திருமுழுக்கு யோவான் யாரைக் குறித்து கூறினார்? **இயேசுவை**
28. கேபா என்றால் என்ன? **பாறை**
29. பெத்சாய்தா ஊரைச் சார்ந்த இயேசுவின் சீடர்கள் யாவர்? **பிலிப்பு, சீமோன், அந்திரேயா**
30. இயேசு நத்தனியேலை எங்கு கண்டார்? **அத்தி மரத்தின் கீழ் இருந்த போது**
31. இயேசு செய்த முதல் அருள் அடையாளம் எது? **கானாவூர் தண்ணீரை திராட்சை இரமாக்கியது**
32. இயேசு சமாரியப்பெண்ணிடம் என்ன கேட்டார்? **குடிக்க தண்ணீர்**
33. சமாரியப் பெண்ணை இயேசு எங்கே சந்தித்தார்? **சமாரியா நாட்டின் சீக்கார் எனும் ஊரில்**
34. பெத்சதா குளத்தில் இறங்க விரும்பியவர் எத்தனை ஆண்டுகளாய் உடல் நலமற்றிருந்தார்? **38**
35. அனைத்து நற்செய்திகளிலும் இடம்பெற்றுள்ள ஒரே புதுமை எது? **அப்பம் பகிர்தல்**
36. சிறுவனிடம் அப்பமும் மீனும் உள்ளது என்பதை இயேசுவிடம் சொன்னது யார்?**அந்திரேயா**
37. உலகின் ஒளி நானே இது யார் கூற்று? **இயேசு**
38. பார்வையற்றவர் எக்குளத்தில் குணம்பெற்றார்? **சீலோவாம் குளத்தில்**
39. மார்த்தா வாழ்ந்த ஊர் எது? **பெத்தானியா**
40. ஆண்டவர் மேல் நறுமணத்தைலம் பூசி தமது கூந்தலால் அவரின் காலடிகளைத் துடைத்தவர் யார்? **மரியா**
41. இயேசுவின் மார்புப்பக்கம் சாய்ந்திருந்த சீடர் யார்? **யோவான்**
42. இயேசுவைக் காட்டிக்கொடுத்தவர் யார்? **யூதாசு**
43. சீமோன் பேதுரு யாரின் காதை வெட்டினார்? **தலைமைக் குருவின் பணியாளனாகிய மால்கு**
44. இயேசுவிற்கு மரண தீர்ப்பிட்டவர் யார்? **பிலாத்து**
45. இயேசு உயிர்த்ததை முதலில் அறிவித்தவர்யார்? **மகதலா மரியா**
46. உயிர்த்த இயேசு சீடர்களுக்கு முதன்முதலில் தோன்றிய பொது அங்கே யார் இல்லை? **தோமா**
47. நீரே என் ஆண்டவர், நீரே என் கடவுள் என்று இயேசுவைப் பார்த்து கூறியவர் யார்? **தோமா**
48. நீ என்னைக் கண்டதால் நம்பினாய், காணாமலே நம்புவோர் பேறுபெற்றோர் என்று யாரால் யாருக்கு கூறப்பட்டது? **இயேசுவால் தோமாவிற்கு**
49. கிரேக்கர்கள் இயேசுவைச் சந்திக்க விரும்பிய போது அவர்களை இயேசுவிடம் கூட்டிச் சென்ற சீடர்கள் யாவர்? **பிலிப்பு, அந்திரேயா**

50. இயேசு யார் இறந்த போது கண்ணீர் விட்டு அழுதார்? **லாசர்**
51. லாசர் இறந்து எத்தனையாம் நாள் இயேசு அவரை உயிர்பெறச் செய்தார்? **4**
52. லாசர் எந்த ஊரைச் சேர்ந்தவர்? **பெத்தானியா**
53. மரியா இயேசுவுக்கு காலடிகளில் பூசிய தைலத்தின் பெயர் என்ன? **இலாமிச்சை**
54. மரியா இயேசுவுக்கு எத்தனை கிராம் நிறையுள்ள தைலத்தை இயேசுவின் காலடிகளில் பூசினாள்? **320** கிராம்
55. இயேசுவைக் காட்டிக்கொடுத்த சீடர் யார்? **யூதாசு ஸ்கரியோத்**
56. பேதுரு இயேவை எத்தனை முறை மறுதலித்தார்? **3**
57. சீமோன் பேதுருவின் மாமியாருக்கு வந்த நோய் என்ன? **காய்ச்சல்**
58. குடிக்க எனக்கு தண்ணீர் கொடும் என்று இயேசு யாரிடம் கேட்டார்? **சமாரியப் பெண்ணிடம்**
59. இயேசு எவ்வூரில் முதல் அருள்அடையாளத்தை நிகழ்த்தினார்? **கானா எனும் ஊரில்**
60. கானாவூர் திருமண விருந்தில் எது தீர்ந்தது? **திராட்சை இரசம்**
61. எனது நேரம் இன்னும் வரவில்லை என்று இயேசு யாரிடம் கூறினார்? **அன்னை மரியாவிடம்**
62. அவர் உங்களுக்குச் சொல்வதையெல்லாம் செய்யுங்கள்» இக்கூற்று யாரால் யாருக்கு எப்போது கூறப்பட்டது? **அன்னை மரியாவால் கானாவூர்த் திருமண வீட்டில் பணியாளர்களுக்கு**
63. திருமண வீட்டில் எத்தனை கல்தொட்டிகளில் பணியாளர்கள் நீர் நிரப்பினர்? **6**
**64.** இவரே என் அன்பார்ந்த மகன் இவரில் நான் பூரிப்படைகின்றேன் என்று எப்போது சொல்லப்பட்டது? **இயேசு திருமுழுக்கு பெற்ற போது**
**65.** இவரே என் அன்பார்ந்த மகன் இவருக்கு செவிசாயுங்கள் என்று எப்போது சொல்லப்பட்டது? **இயேசு உரு மாறிய பொது**
66. இயேசு உருமாறிய போது அவருடன் எத்தனை சீடர்கள் இருந்தனர்? **3**
**67.** « நாசரேத்திலிருந்து நல்லது எதுவும் வர முடியுமோ» யாரால் யாருக்கு கூறப்பட்டது? **நத்தனியேலால் பிலிப்பிற்கு**
68. அத்தி மரத்தின் கீழ் இருந்தவர் யார்? **நத்தனியேல்**
69. இயேசுவை பார்க்க அத்தி மரத்தின் மேல் ஏறியவர் யார்? **சக்கேயு**
70. நத்தனியேலை இயேசுவிடம் கூட்டி வந்த சீடர் யார்? **பிலிப்பு**
71. இயேசுவால் இவர் உண்மையாகவே இஸ்ராயேலர், கபடற்றவர் என்று புகழப்பட்டவர் யார்? **நத்தனியேல்**
72. யேசு எந்த மலைக்கு சென்று இரத்த வியர்வை சிந்தி செபித்தார்? **ஒலிவ மலை**
73. இயேசுவின் பெண்சீடர்களுள் ஒருவர் பெயரைக் கூறுக? **மகதல மரியா**
74. இயேசு எந்த நகரங்களுக்கு சாபமிட்டார்? **கொராசின், பெத்சாய்தா**
75. விதைப்பவன் உவமையில் விதை எதற்கு ஒப்பிடப்படுகின்றது? **இறைவார்த்தைக்கு**
**76.** இயேசு எத்தனை வயதில் இறந்தார்? **33**
77. இயேசு எத்தனை திருத்தூதர்களை நற்செய்திப்பணிக்காக ஊர்ஊராக அனுப்பினார்? **12**
78. இயேசு எத்தனை வயதில் நற்செய்திப்பணியைத் தொடங்கினார்? **30**
79. சிலுவையடியில் நின்ற இயேசுவின் சீடர் யார்? யோவான்
80. திருஅவையை இன்றும் வழி நடத்தி வருபவர் யார்? **தூய ஆவியார்**
81. இயேசு திருஅவையை ஏற்படுத்தி அதன் தலைவராக யாரை நியமித்தார்? **திருத்தூதரான பேதுருவை**
82. திருஅவையை ஏற்படுத்தியது யார்? **இயேசுக்கிறிஸ்து**
83. குருத்துவம் எவ்வகைப்படும்? **பணிக்குருத்துவம், பொதுக்குருத்துவம்**
84. திருமுழுக்கின் மூலம் நாம் எல்லோரும் அடையும் குருத்துவம் எது? **பொதுக்குருத்துவம்**
85. பெரிய இறைவாக்கினர்கள் யாவர்? **எசாயா, எரேமியா, எசேக்கியேல்**
**86.** சிறிய இறைவாக்கினர்கள் யாவர்? **பாரூக், நாகூம், யோவேல்**
87. நம்பிக்கையின் தந்தை எனப்படுபவர் யார்? **ஆபிரகாம்**
88. அருளடையாளங்கள் எத்தனை? **7**
89. ஒரு முறை மட்டும் பெறும் அருளடையாளங்கள் எவை? **திருமுழுக்கு, உறுதிபூசுதல், குருத்துவம்**
90. பாவங்களை மன்னிக்கும் அருளடையாளங்கள் எவை? **திருமுழுக்கு, ஒப்புரவு, நோயில் பூசுதல்**
91. திருப்பலியின் எந்தப்பகுதியில் அப்பம் இயேசுவின் உடலாகவும், இரசம் இயேசுவின் இரத்தமாகவும் மாறுகின்றன? **நற்கருணை வழிபாடு**
92. திருமுழுக்கில் பயன்படுத்தப்படும் பொருள்கள் யாவை? **நீர், எண்ணெய், மெழுகுதிரி, வெண்ணிற ஆடை**
**93.** மரியன்னை உலகின் தாய் எனும் திருவிழாவை திருஅவை எப்போது கொண்டாடுகின்றது? **தை 1**
**94.** தூய ஆவியின் கொடைகள் எத்தனை? **7**
**95.** புனித வியாழன் அன்று இயேசு உருவாக்கிய இரண்டு திருவருட்சாதனங்கள் யாது? **தேவநற்கருணை, குருத்துவம்**
96. யூதாசுக்கு பதிலாக திருத்தூதராக தெரிவு செய்யப்பட்ட திருத்தூதர் யார்? **மத்தியா**
97. திருவிவிலியத்தின் இறுதி நூல் எது? **திருவெளிப்பாடு**
98. மடு அன்னை முடி சூட்டப்பட்ட 100 ஆண்டு விழா எப்போது கொண்டாடப்பட்டது? **02-07-2024**
99. எமது திருத்தந்தையின் பெயர் என்ன? **திருத்தந்தை பிரான்சிஸ்**
100. திருத்தந்தை பிரான்சிஸ் எந்நாட்டைச் சேர்ந்தவர்? **ஆர்ஜென்டினா**

## பேச்சுப்போட்டி (மனப்பாடம் செய்து சமர்ப்பிக்க வேண்டும்.)

### செபிக்கக் கற்றுக் கொள்வோம்

இறைவனைப் புகழ வேண்டும், இறைவனிடம் வரங்கள் பெறவேண்டும் என்ற வழக்கம் மனித வரலாற்றின் ஆரம்பத்திலிருந்தே இருந்து வருகிறது. இறைவனோடு உரையாடுவதை கிறிஸ்தவர்கள் செபம் என்றும், இஸ்லாமியர்கள் தொழுகை என்றும் மற்ற சமயத்தவர் பிற பெயர்களாலும் அழைக்கின்றனர்.

திருமுழுக்கு என்னும் அருளடையாளத்தின் வழியாக இறைவனின் பிள்ளைகள் என்ற நிலைக்கு உயர்த்தப்பட்டு நாம் அவரோடு கொண்டுள்ள உறவை உறுதிப்படுத்திக் கொள்ள வழங்கப்பட்ட வலுவான சாதனமே செபம்.

"தினமும் மூவேளை உணவு ஒரு சராசரி மனிதனுக்கு" என்ற கூற்றைப் போல ஒரு சராசரி கிறிஸ்தவனும், கிறிஸ்தவளும் தினமும் இத்தனை முறைதான் செபிக்க வேண்டும் என்ற வரைமுறை கிடையாது.

நாம் எப்பொழுதெல்லாம் செபிக்க வேண்டும் என்று நினைக்கின்றோமோ, அப்பொழுதெல்லாம் செபிக்கலாம். இன்றைய நவீன உலகில் "வாரம் ஒரு முறை திருப்பலி பாரம்" என்று நினைப்பவர்களுக்கு மத்தியில் செபம் செய்ய முன்வருபவர்கள் ஒரு சிலரே, எல்லா வரங்களையம் பெற்று நிறைவாக, மகிழ்ச்சியாக வாழ்கின்ற போது இவையெல்லாம் கடவுளின் கருணை, கொடை, அன்பு என்பதை மறந்து கடவுளையும் மறந்துவிடுகின்றோம். எப்பொழுது வேதனைகள், வியாதிகள், சோதனைகள் நம்மை முற்றுகையிட்டு நம் வாழ்வைச் சின்னாபின்னம் ஆக்குகிறதோ அப்பொழுது கடவுளை நம்மையும் அறியாமல் உதவிக்கு அழைக்கின்றோம். இந்த நிலை மாறி வளமையிலும், வறுமையிலும், உயர்விலும், தாழ்விலும் இறைவனை நோக்கிக் கைகளை உயர்த்தி செபிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும்.

## பாடல் போட்டி (மனப்பாடம் செய்து பாட வேண்டும்.)

மடு மாதாவே உம் மடி தேடி ஓடி வந்தோம்

மன்றாட்டைக் கேளுமம்மா

உம் மடி நாடியே உம் திருப்பாதம் ஓடி வந்தோம்

உம் அருள் தாருமம்மா

உம்மையே அண்டி வந்தோம் அம்மாவே

எம் குறை தீர்க்கும் மடு மாதாவே - 2

இனமில்லை தேசமில்லை இருப்பதற்கொன்றுமில்லை

இழந்திட்ட உந்தன் அன்புப் பிள்ளை நானம்மா -2

உதவிட மாட்டாயோ அம்மாவே

இரங்கிட மாட்டாயோ மாதாவே -2

கோடான கோடி மக்கள் தஞ்சமென நாடி வந்தோம்

அமைதியைத் தரவேண்டும் அம்மாவே - 2

உதவிட மாட்டாயோ அம்மாவே

இரங்கிட மாட்டாயோ மாதாவே -2